5th November 1966]

(3) SCARCITY OF RICE.

SRI M. KALYANASUNDARAM : Sir, I have given notice of the following adjournment motion—

" That the business of the House be adjourned to discuss the following urgent matter of public importance, viz., the scarcity, poor quality and high prices of rice in the State, particularly in rural areas subjecting the working people to serious hardship."

சென்னை மாதிரி ஸ்டாச்சுடரி ரேஷனிங் இருக்கக்கூடிய இடங்களிலே அரிசி மட்டமாக இருக்கிறது. பிளாக் மார்க்கெட்டில் மூன்று ரூபாய் கொடுத்தால் நல்ல அரிசி கிடைக்கிறது. திருச்சி, சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களிலே 3½ ரூபாய், 4 ரூபாய் என்று விலை உயர்ந்துகொண்டே போகிறது என்று தகவல் வந்திருக்கிறது. அரசாங்கம் கொடுக்கக்கூடிய அரிசி மட்டமான அரிசி. ஏன் மட்டமான அரிசியைக் கொடுக்கவேண்டும்? அதற்குக் காரணம் என்ன? நல்ல அரிசி கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? உணவுப் பிரச்னை சிக்கலாகிக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஜனங்களிடத்திலே கிளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. வடக்கே சில மாநிலங்களிலே ஏற்படுகின்ற மாதிரி இங்கேயும் ஏற்பட்டுவிடக்கூடாது. அது அந்த அளவுக்கு முற்றுவதற்கு முன்னால் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள மக்கள் நல்லவர்கள்; அவர்கள் பொறுமையுடன் இருக்கிறார்கள். நிலைமை முற்றுவதற்கு முன்னாலேயே இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறுவது பொதுவான குறைபாடுதான். அரிசி நன்றாக இல்லை, விலை அதிகமாக இருக்கிறது என்றால் அதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லை; விவரங்கள் சொல்லலாம். ஆனால் சென்னைக்கு இந்த மாநிலத்திலிருந்துதான் அரிசி வருகிறது. பச்சரிசி விரும்புகிறவர்கள்தான் பச்சரிசி கிடைக்காத காரணத்தாலே அரிசி நன்றாக இல்லை என்று சொல்கிறார்கள். கூடிய வரையில் நல்ல அரிசி அளிக்கத்தான் ஏற்பாடு செய்யப்படுகிறது. விலையைக் கட்டுப்படுத்துவதற்குத்தான் நாமே கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. கேள்வி நேரத்திலே கொள்முதல் அதிகமாகச் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். விற்கக் கூடிய நோக்கிலே தான் அதை அரசாங்கம் கொள்முதல் செய்துகொண்டிருக்கிறது.

குறுவை கொள்முதலிலே குவிண்டாலுக்கு 3 ரூபாய் கொடுக்கும் போது கூட, விற்கக் கூடிய விலையை ஏற்றவில்லை. அதனால் அரசாங்கத்திற்கு 50 லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவாகும். இந்த முறையில் இப்பொழுது நிலைமை சீர்ப்பட்டுக் கொண்டு வருகிறது.

[திரு. எம். பக்தவதசலம்] [5th November 1966

ஒரு மாத காலத்திற்கு முன்பாக மேட்டூரில் தண்ணீர் குறைவாக இருந்த நிலைக்கு இப்போது சீர்ப்பட்டுக் கொண்டு வருகிறது எப்படியும் இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : This is not a matter for an adjournment motion. So, consent is withheld.

III.—ANNOUNCEMENTS.

(1) POSTPONEMENT OF CALLING ATTENTION NOTICE.

MR. SPEAKER : Regarding the Call Attention Notice given by the hon. Member, Sri Rama. Arangannal, the Hon. Minister for Food. . . .

SRI M. KALYANASUNDARAM : Sir, I have given notice of a privilege matter.

MR. SPEAKER : That will be taken up on Monday the 7th instant.

Now the Hon. Minister for Food requests that this matter may be taken up on the 7th or 8th instant. It is therefore postponed.

IV.—CALLING ATTENTION TO RECOGNITION OF ONLY CERTAIN LANGUAGES AS MEDIA FOR U.P.S.C. EXAMINATIONS.

* திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, குஜராத்தி, மராத்தி, இந்தி, வங்காளம் ஆகிய மொழிகள் மட்டுமே அரசாங்கத் தேர்வுகள் எழுதுவதற்கேற்பத் தகுதி பெற்று வளர்ச்சியடைந்துள்ளன என்றும், தமிழ் போன்ற பிற மொழிகள் அதற்கென அந்த அளவு வளர்ச்சியடையவில்லை என்றும், மத்திய அரசு அலுவலர் தேர்வுக் கழகம் எடுத்துள்ள முடிவு, அக்கழகம் நடத்தும் தேர்வுகளைத் தங்கள் தாய்மொழியில் எழுதமுடியாத நிலைக்குத் தமிழ் மாணாக்கர்களுக்குத் தீங்கிழைத்துள்ளதும், பல்கலைக் கழக நிலையிலும், மற்ற உயர் கல்வி மட்டங்களிலும் போதுமான அளவுக்கு முன்னரே தமிழைப் பயிற்று மொழியாகச் செயல்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியதனாலேயே இந்த நிலை எழுந்துள்ளதென்பதும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று காலைப் பத்திரிகையில் கூட, கனம் அங்கத்தினர்கள் படித்திருக்கலாம். மத்திய பார்லிமெண்டில் ஒரு கேள்விக்கு விடை அளிக்கும்போது, இந்த விஷயம் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிசீலனையில் இருக்கிறது, எப்படிச் செய்வது என்ற சிபாரிசு இன்னும் வரவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இதிலே, முடிவாகிவிட்டது என்று பத்திரிகையிலே வந்ததை வைத்துக்கொண்டு எடுத்துக்கொள்ள வேண்டாம். கீழ்க்கண்ட விவரங்களை நான் இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன்.